2010 ஏப்ரல் 7] [திரு. சுப. தங்கவேலன்]

கொடுக்கவும் சம்மதிக்கிறேன். மேலும், என்னிடமிருந்து பிடிக்கப்படும் தொகை எனக்கு வருங்காலங்களில் பெறும் பில் தொகையில் மூன்று அல்லது நான்கு சமத் தவணைகளில் பிடித்துக்கொள்ள சம்மதிக்கிறேன்" என்று ஒப்பந்ததாரர் தானே முன்வந்து கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்கு, கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட இந்தத் துறைக்கு அவப்பெயர் ஏற்பட்டுவிடக்கூடாது என்று எழுதியிருக்கிறார். இதில் எந்த நிதியிழப்பும் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொண்டு, அற்புதமான கட்டடங்களை கட்டி வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வந்தால், அனைத்து திட்டப் பகுதிகளுக்கும் அழைத்துச் செல்வதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்பதைக் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் (திருத்தச்) சட்டமுன்வடிவு.* மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. வரவு–செலவுத் திட்டம், 2010–2011, பொது விவாதம்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010–2011* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம் தொடர்ச்சி. (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, நான் உங்களுக்கு காலையிலேயே சொல்லிவிட்டேன். அது முதலமைச்சர் அவர்களுடைய துறை சம்பந்தப்பட்டது. நான் கேட்டுவிட்டுச் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். இதற்குப் பிறகும் கேள்வியை எழுப்பாதீர்கள், நாளைக்கு உங்களுக்குச் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) காலையிலேயே நான் உங்களிடம் சொல்லியிருக்கிறேன். அனுமதியில்லை. சொல்லியாகிவிட்டது, நான் காலையிலேயே உங்களிடத்தில் சொன்னதற்குப் பிறகு திரும்பத் திரும்ப ஏன் எழுப்புகிறீர்கள்? அனுமதியில்லை. (குறுக்கீடுகள்)

2010–2011 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் *20* நிமிடங்கள். (குறுக்கீடுகள்)

***திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிரியின் முன்பு அஞ்சாமை, அனைவரும் போற்றும் ஆளுமை, செயலில் திறமை, சிந்திப்பதில் புதுமை (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கே. பாலபாரதி, நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதைக் காலையிலேயே